**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.15/2024**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 10 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமு | ஜாதி | : | |
| த.பெ | : | பெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |
| தேதி | : | 10.03.2026 | | | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் ஏற்கனவே எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 12.07.1972 தேதியிட்ட வாதியின் தாயார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் **(வா.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 19.08.1991 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் கணினி வழி சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 27.09.1982 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **(வா.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.02.1986 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **(வா.சா.ஆ.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 24.11.2008 தேதியிட்ட தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **(வா.சா.ஆ.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 13.03.2024 தேதியிட்ட மாவட்ட பதிவாளர், திண்டுக்கல் அவர்கள் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் **(வா.சா.ஆ.6/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 19.03.2024 தேதியிட்ட மாவட்ட குற்றப்பிரிவில் இருந்து வாதிக்கு வந்த அழைப்பாணை நகல் **(வா.சா.ஆ.7/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 25.03.2024 தேதியிட்ட வில்லங்க சான்று (01.01.1984-24.03.2024) கணினி நகல் **(வா.சா.ஆ.8/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 15.03.2024 தேதியிட்ட வருவாய் கோட்டாச்சியரிடம் கொடுத்த மனு உண்மை நகல் **(வா.சா.ஆ.9/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. திருமுலுகவுண்டர் பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் **(வா.சா.ஆ.10/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. சர்க்கரை கவுண்டர் பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் **(வா.சா.ஆ.11/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **(வா.சா.ஆ.12/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor